(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 27.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 ஏப்ரல் 21 வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

12/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பிரதம அமைச்சரும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

45/2022

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் சந்தைக்கும் கல்வி முறைமைகளுக்கும் இடையிலான பொருத்தமின்மை காரணமாக இலங்கையில் தொழிலின்மை வீதம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் கல்விசார் கற்கைகளுக்கான பாடநெறிகள் தொழில் நோக்கிலான பாடநெறிகளாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதையும்;

(iii) கல்விசார் கற்கைகளும் தொழில்சார் கற்கைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி விடயங்கள் தொடர்பாக தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் கல்விசார் கற்கைகளுக்கான பாடநெறிகளை தொழில் நோக்கிலான பாடநெறிகளாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

(v) அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

258/2022

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அண்மித்த ஐந்து கல்வியாண்டுகளில் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு மஹபொல புலமைப்பரிசில் பெறுபவருக்கும் தற்போது செலுத்தப்படும் மாதாந்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தகுதியின் அடிப்படையில் மஹபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஐந்து கல்வி ஆண்டுகளில் உயிரியல், கணிதம், வணிகம் மற்றும் கலைப் பிரிவுகளுக்காக தகுதியின் அடிப்படையில் மஹபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

577/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பசளையின் அளவு ஒவ்வொரு பசளை வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பசளையை இறக்குமதி செய்த கம்பனிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் பசளை இறக்குமதிக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் தரத்தில் குறைவான பசளையை இறக்குமதி செய்ததாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கம்பனிகளுக்கு எதிராக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1184/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயற் காணிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்கள் என்பதையும் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக என்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் நெற் பயிர்ச்செய்கையிலிருந்து விலகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் நெல் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உரத்திற்கான தேவைப்பாடு ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1197/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1321/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “பெட்டிகலோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட்” என்ற பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பெயரில் பல்கலைக்கழகமொன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) இப்பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கு நிதி பெறப்பட்ட முறை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தைப் பேணிவருவதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு மாணவரிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1478/2022

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள புனிதத்தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி புனிதத்தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி புனிதத்தளங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(iv) மத்திய கலாசார நிதியத்தினால் நிருவகிக்கப்படுகின்ற புனிதத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்ற முறையில் ஏனைய பௌத்த புனிதத்தளங்களையும் அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1737/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் கால்நடைகள் சார்ந்த நோயொன்று இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பதிவாகின்றது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இன்றளவில் இந்நோய்க்கு ஆளாகியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2021 நவம்பர் 23 ஆம் திகதிய 2255/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 (3) ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2021 டிசம்பர் 21 ஆம் திகதிய 2259/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2021 டிசம்பர் 31 ஆம் திகதிய 2260/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213ஆ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122, 122அ மற்றும் VIIஅ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2240/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

13.

ஶ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.